
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



வெற்றிதரும் உழைப்பாளர்; நகைமு கத்தர்;
விசாலமுறும் பொருளாளர்; காசிச் செல்வர்;
நற்றவம்சேர் முத்தம்மாள் ஆச்சி யோடும்
ரசிகமணி சிதம்பரனார் நீடு வாழ்க

ஜூன் 1996

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

ஆசிரியர்:
வி.என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
நடராஜ் அண்ணாமலை

துணை ஆசிரியர்:
எல்.சுந்தரம்

குரல் 15
ஒலி 5

தாது
வைகாசி

ஜூன்
1996

பண்ணினார் அருமறை பாடினார் நெற்றியோர்
கண்ணினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
விண்ணினார் விரிபுனல் மேவினார் சடைமுடி
அண்ணலார் எம்மையா ளுடையஎம் அடிகளே

- திருஞான சம்பந்தர்

அலுவலகம்:
108–109, நேதாஜி ரோடு,
அறை எண் 12, மாடி
மதுரை – 625 001.

ஆண்டுச் சந்தா ரூ. 42–00

டெபாசிட் சந்தா ரூ. 300–00



MOHANA TRADERS (FIRM)

18A, WEST TOWER STREET
MADURAI - 625 001. PHONE: 37364

AUTHORISED DEALERS:

MOHANA TRADERS

166A, NETHAJI ROAD,
MADURAI - 625 001. PHONE: 37667

மீண்டும் கலைஞர் ஆட்சி


கடந்த 5 ஆண்டுகளாகத் தமிழக ஆட்சி ஆடம்பர ஆட்சியாகக் காட்சியளித்தது. கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. அரசுப்பணம் வீணடிக்கப்பட்டது. எங்கு பார்த்தாலும் கட்டவுட்டுகள்தான் தெரிந்தன. லஞ்சலா வண்யம் தாண்டவமாடியது. அமைச்சர்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிலிருந்து சாதாரண அதிகாரிகள் வரை பயமின்றி, கூச்சமின்றி லஞ்சம் வாங்கினார்கள்.

காவல் துறையும் சரியாக, நியாயமாக இயங்கவில்லை. ஆகவே மக்களுக்குத் தொடர்ந்து வெறுப்பு ஏற்பட்டது. வெறுப்பு ஏற்பட்டவுடனே கிளர்ச்சி ஏற்படவில்லை. காரணம் ஆட்சியாளர்களால் தங்கள் வியாபாரம், குடும்பம் பாதிக்கப்படலாம் என்ற அச்ச உணர்வே. ஆகவே மக்கள் தங்களுடைய எதிர்ப்பை இப்போது மொத்தமாகத் தேர்தலில் காண்பித்து விட்டார்கள்.

ஜெயலலிதா ஆட்சியில் அவர்கள் செய்த தவறு நகர மக்களுக்குத்தான் தெரியும் என அவர்கள் நம்பினார்கள். ஆனால் அவர்கள் செய்த ஊழல்கள் கிராம மக்களுக்கும் நன்கு தெரிய வந்தது.

ஜெயலலிதா ஆட்சியைப் பிடிக்க ராஜீவ் காந்தியின் மரணம் ஒரு காரணமாக இருந்தது. இப்போது அதுபோன்ற அசம் பாவிதம் எதுவும் நிகழவில்லை. எனவே அவர் மிகப் பெரிய தோல்வியைச் சந்தித்திருக் கிறார். அவரது ஆட்சியின் மீது மக்களுக்கு இருந்த அவநம்பிக்கையை இது எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் மாநிலக் காங்கிரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கின்றன. சென்ற முறை சட்ட மன்றத்தில் ஒரே ஒரு இடத்தைப் பிடித்திருந்த



தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தும். (சென்னையில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு விழாவில் எடுக்கப் பெற்ற படம் இது.)

தி.மு.க. இப்போது மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது. இந்த வெற்றிக்கு டாக்டர் கலைஞரிடம் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் அவருடைய சலியாத உழைப்புமே காரணங்களாகும்.

டாக்டர் கலைஞர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சுட்டிக் காட்டலாம். சென்ற தேர்தலில் ஒரே ஒரு சட்டமன்ற உறுப்பினரைப் பெற்றிருந்த போதிலும் அவர் அரசியலில் துவண்டு போகாமல் பொறுமையாக இருந்து இன்று வெற்றிக் கனியைப் பறித்திருக்கிறார். இதைப் பார்க்கும் போது இரண்டாவது உலகப் போரில் ஜப்பான் நாடு அழிந்து போய் இன்று வல்லரசு நாடுகளில் ஒன்றாகத் திகழும் காட்சியே நமக்குத் தெரிகின்றது.

தமிழகத்தில் உள்ள பெரு ர் தலைவர் திரு. மூப்பனார், திரு. ப. சிதம்பரம், திரு. எம். அருணாசலம், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் பிரதமராக இருந்த திரு. பி.வி. நரசிம்மராவ் தமிழகத் தலைவர்களின், தமிழகக் காங்கிரஸ் தொண்டர்களின், தமிழக மக்களின் உணர்வுகளுக்குச் செவிசாய்க்காமல் அ.தி.மு.க. வோடு கூட்டணி சேர்ந்தார். என்றைக்கும் தலைமைக்குக் கட்டுப்பட்டு, விசுவாசமாக நடந்து கொள்கிற திரு. மூப்பனார் தமிழகக் காங்கிரஸ் தொண்டர்களின், தமிழக மக்களின் உணர்வுகளைக் கண்டு மலைத்துப் போனார். கூடுமானவரை தேர்தலை விட்டு ஒதுங்கி இருக்கின்ற உணர்வோடு சென்னை வந்திறங்கிய மூப்பனாரை காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தொண்டர்கள் செய்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாகவும் திரு. ப. சிதம்பரம், திரு. எம். அருணாசலம் ஆகியோரின் வற்புறுத்தலின் காரணமாகவும் திரு. மூப்பனார் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைத் தொடங்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார். அப்பொழுது அவர் மூப்பனாராகக் காட்சியளிக்க வில்லை. மக்களுக்குத் தலைவர் காமராஜாகவே காட்சி தந்தார்.

காங்கிரஸ் தொண்டர்களின் கொந்தளிப்பின் காரணமாக திரு. நரசிம்மராவின் கட் அவுட் எரிக்கப்பட்ட போது வன்முறை தாண்டவமாடக்கூடாது என்று திரு. மூப்பனார் பொங்கி எழுந்து தொண்டர்களைக் கண்டித்ததுடன் தொண்டர்களின் செயல்களுக்காக மன்னிப்புக் கேட்டபோது அவர் மூப்பனாராகவும் காட்சியளிக்கவில்லை; காமராஜராகவும் காட்சியளிக்கவில்லை; மகாத்மா காந்தியாகவே காட்சி தந்தார்!

காந்தி மகான் கண்ட காங்கிரஸ் இன்னும் அழிந்து விடவில்லை; திரு. மூப்பனார் உருவில் அது வாழ்ந்து கொண்டிருக்கிறது. புராணங்களிலே கிருஷ்ண பரமாத்மா தோன்றுவது போல அந்த இக்கட்டான சூழ்நிலையில் திரு. ரஜினிகாந்த் தோன்றி அமெரிக்காவிலிருந்து டாக்டர் கலைஞர் மற்றும் திரு. மூப்பனாரோடு தொடர்பு கொண்டு கூட்டணி ஏற்படுத்த உதவினார். அதன் பிறகு அந்தக் கூட்டணிக்காகத் தொலைக் காட்சியில் தோன்றி பிரசாரம் செய்தார்.

இந்தத் தேர்தலில் அவர் கூறியபடி தமிழக மக்கள் அ.தி.மு.க. விற்கு வாக்களிக்காமல் தமிழ் மாநிலக் காங்கிரஸ் – தி.மு.க. கூட்டணிக்கு அதிக அளவில் வாக்களித்து தமிழகத்தைக் காப்பாற்றி விட்டார்கள். ஆளுகின்றவர்களை மாற்றி ஆண்டவன் தமிழகத்தைக் காப்பாற்றி விட்டான்.

மிகச் சிறந்த நிர்வாகத் திறன் பெற்ற சாணக்கியரான டாக்டர் கலைஞர் தலைமையில் தமிழகம் வளரவும் மக்கள் எல்லா நலன்களையும் பெறவும் அன்னை அங்கயற் கண்ணியை வணங்குகிறேன்.

வி.என். சிதம்பரம்
ஆசிரியர்.

மாண்புமிகு ப. சிதம்பரம்

மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் வெற்றி பெற்றிருப்பது நகரத்தார்களுக்குப் பெருமை. நகரத்தார் என்று குறுகிய வட்டத்தில் சொல்ல மாட்டேன். தமிழனுக்குப் பெருமை. அது கூட குறுகிய வட்டம்தான். இந்தியனுக்குப் பெருமை.

உலகமே போற்றிக் கூடிய அளவு திறமை பெற்றவர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள். கடந்த 12 ஆண்டுகளாக ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக மிகச் செம்மையாக அவருடைய கடமையை ஆற்றியிருக்கிறார்.

1991 முதல் 1996 வரை இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையை வகுத்ததிலும் அதை நிறைவேற்றியதிலும் அவருக்குப் பெரும் பங்கு இருந்திருக்கிறது. 1991–ல் நிலை குலைந்த இந்தியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தியதிலும் அடகு வைத்த தங்கத்தை மீட்டியதிலும் 2100 கோடி ரூபாய் மட்டுமே இருந்த அந்நியச் செலாவணி இருப்பை 80,000 கோடியாக உயர்த்தியதிலும் 36,000 கோடி ரூபாய் அளவில் இருந்த ஏற்றுமதியை ஒரு இலட்சம் கோடி ரூபாயாக உயர்த்தியதிலும் பல்லாயிரம் கோடி ரூபாய்களுக்கு அந்நிய நாட்டு உள்நாட்டு முதலீடுகளைக் கொண்டு வந்ததிலும் நிதி அமைச்சராக இருந்த டாக்டர் மன்மோகன் சிங்கிற்கு என்ன பங்கு இருந்ததோ ஏறத்தாழ அதே அளவு பங்கு ப. சிதம்பரம் அவர்களுக்கும் இருந்திருக்கிறது.

கடந்த 5 ஆண்டுகளில் நாடாளு மன்றத்தில் மட்டும் அன்றி உலக நாடுகளின் அரங்குகளில் ஒரு வேட்டி கட்டிய தமிழனின் குரல் ஒங்கி ஒலித்தது என்றால் அது திரு. ப. சிதம்பரத்தின் குரலாகத்தான் இருந்திருக்கிறது.

சென்ற தேர்தலில், தேர்தல் அறிக்கை ராஜிவ் காந்தி இல்லத்தில் தயாரானபோது அதில் முக்கிய பங்கு வகித்து தேர்தல் அறிக்கையைத் தயாரித்தவர் திரு. ப. சிதம்பரம். அப்படி ஒரு நாள் இரவு முழுவதும் கண் விழித்து தேர்தல் அறிக்கை தயாரித்துக் கொண்ருந்தபோது அதிகாலை 3–30 மணிக்குப் பணியாளர் தேநீர் கொண்டு வந்திருக்கிறார். அந்தப் பணியாளரிடமிருந்து தேநீரை திரு. ராஜிவ் காந்தி வாங்கி தன் கையால் திரு. சிதம்பரத்திடம் கொடுத்து அதை அருந்தச் சொல்லியிருக்கிறார். இதிலிருந்து திரு. ராஜிவ் காந்தி திரு. சிதம்பரத்தை எவ்வளவு நேசித்தார் என்பது



தெரியவரும். அவருடைய திறமைக்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்தார் என்பதும் தெரிய வரும். 1996 தேர்தலுக்கு தேர்தல் அறிக்கையை திரு. சிதம்பரம் தயாரித்துக் கொண்டிருந்ததாகவும் அந்த நேரத்தில் கட்சி பிளவுபட்டு தமிழ் மாநிலக் காங்கிரஸிற்கு வந்து விட்டதால் தேர்தல் அறிக்கையை நிறைவு செய்வதற்குக் கூட திரு. நரசிம்மராவிற்குச் சரியான நபர் கிடைக்கவில்லை என்றும் பரவலாகப் பேசிக்கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல தமிழ்நாட்டிற்கு திரு.

நரசிம்மராவ் தேர்தல் பிரசாரம் செய்ய வந்த போது அவரது பேச்சை மொழி பெயர்த்துச் சொல்லக் கூட சரியான நபர் கிடைக்கவில்லை என்றும் பேசிக் கொண்டார்கள்.

திரு. ப. சிதம்பரம் ஒரு நகரத்தார் என்கிற குறுகிய கண்ணோட்டத்தில் பார்க்காமல் தமிழன் என்கிற சிறிய கண்ணோட்டத்தில் பார்க்காமல் தன்னலங்கருதாத உண்மைத் தொண்டர், படித்தவர், பண்புள்ளவர் பொருளாதாரம் தெரிந்தவர், இந்தியாவை உலக நாடுகளில் மிகச் சிறந்த நாடாகக் கொண்டுவரக் கூடிய தகுதி படைத்தவர் என "நகரத்தார் குரல்" பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறது.

வி.என். சிதம்பரம்
ஆசிரியர்.

மதுரை சங்கத்தின் செயற்குழுக் கூட்டம்

மதுரை நகரத்தார் சங்கத்தின் 24வது செயற்குழுக் கூட்டம் 11-5-96 மாலை 4-00 மணி அளவில் மதுரை நகர விடுதியில் துணைத் தலைவர்களில் ஒருவரான திரு. எவர்பிரைட் நாச்சியப்ப செட்டியார் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் திரு.ஆர். சொக்கலிங்கம் வரவேற்றுப்பேசினார். திருப்பரங்குன்றம் நகர விடுதியில் உள்ள மரகத விநாயகர் கோவிலைத் திருப்பணி செய்து குட நீராட்டு நடத்த பொதுக் குழுவுக்குப் பரிந்துரை செய்யப் பெற்றது. 31-3-96 வரை உள்ள வரவு - செலவுக் கணக்கு ஏற்றுக் கொள்ளப் பெற்றது.

கோவிலூர் ஆதீனத்தில் விழா

கோவிலூர் ஆதீனத்தில் உருவாகிவரும் சனாதன தர்ம உலகப் பல்கலைக் கழகத்தில் உள்ள ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஆண்டவர் நர்சரிப்பள்ளி திருமுறைக் கல்லூரி. வேத சிவாகமக் கல்லூரி. நாதசுர தவில் இசைக் கல்லூரி ஆகியவற்றின் முதல் ஆண்டு விழா 21-4-96 காலை சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு கோவிலூர் ஆதீனம் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் தலைமை தாங்கினார்கள்.

காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்று. கல்விக் குழுச் செயலர் என்ற முறையில் கல்வி நிலையங்களின் வளர்ச்சி பற்றிப் பேசினார். திருமுறைக் கல்லூரி மாணவர்கள் தேவாரம் பாடினர். வேத சிவாகமக் கல்லூரி மாணவர்கள் வேதம் முழங்கினர். நாதசுரதவில் இசைக் கல்லூரி மாணவர்கள் ஒன்றாக இணைந்து மிக அற்புதமாக நாதசுரம் தவில் வாசித்தார்கள். நர்சரிப் பிள்ளைகள் இனிய பாடல்களைப் பாடி மக்களைக் கவர்ந்தார்கள் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர் திரு. பி. இராமசாமி விழாத் தொடக்க உரை ஆற்றினார். அறமனச் செம்மல் திரு. நா. இராமசாமி செட்டியார். டாக்டர் எம்.ஆர். முத்தையா. பேராசிரியர் முனைவர் திரு. ச. மெய்யப்பன். ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

கவிஞர் திரு. அர. சிங்கார வடிவேலன் 'கவிதையும் ஆன்மீகமும்' பற்றி ஆன்மீகப் பூங்காவின் 56ஆவது உரை ஆற்றினார். திருமதி கஸ்தூரி இராமசாமி பரிசுகள் வழங்கினார். கம்பார் முததையா செட்டியார் நன்றி கூறினார். விழாவிற்குத் திரளான மக்கள் வருகை தந்தனர்.

பம்பாய் நகரத்தார் சங்கம்

நாசிக் பஞ்சவடியில் உள்ள நகரத்தார் விடுதியில் எழுந்தருளி உள்ள கார்த்திக் என்ற முருகனுக்கு பங்குனி உத்தரத்தன்று 2-4-96 பம்பாய் நகரத்தார்கள் கோதாவரி நதிக் கரையிலிருந்து காவடி. பாற்குடம். தீர்த்தக் குடம் முதலியன தாங்கிவந்து அபிஷேக ஆராதனைகள் செய்து 21-ஆம் ஆண்டாக வழிபட்டனர்.

பம்பாய் நகரத்தார் பங்குனி உத்தரத் திருவிழாக் குழு சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள 'கார்த்திகேயன் பாமாலை' நூல் வெளியீட்டு விழா அன்று காலை 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தலைமையில் நடைபெற்றது. திரு. அரு. சோ. நூலை வெளியிட்டு வாழ்த்தினார். நூலின் முதல் பிரதியினைப் பம்பாய் நகரத்தார் சங்கத் தலைவர் திரு. அண்ணாமலை பெற்றுக் கொண்டார்.

கார்த்திக் முருகனுக்கு வெள்ளி அங்கி. தங்க நகைகள் அணிவிக்கப்பெற்றன. திரளான மக்கள் வந்து முருகனை வணங்கினர். மகேஸ்வர பூசை நடைபெற்றது. மாலையில் விநாயகர் மூஷிக வாகனத்திலும் முருகன் மயில்வாகனத்திலும் எழுந்தருள நகரத்தார்கள் ஸ்ரீபாதம் தாங்கி நகர்வலம் வந்தனர் காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகத்தின் நிர்வாகத்தில் இருக்கும் இக்கோவிலின் குட நீராட்டு இந்த நூற்றாண்டில் இரண்டு முறை நிகழ்ந்துள்ளது. இக்கோவிலைப் பம்பாய் நகரத்தார்கள் நன்கு கொண்டாடி வருகின்றனர். காசிநகரச் சத்திர மானேஜர் திரு. வள்ளியப்பன் வெள்ளி அங்கி. நகை முதலியன எடுத்து வழங்குவதற்காக காசியிலிருந்து நாசிக் வந்து 4 நாட்கள் தங்கி இருந்து எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார். நாசிக் நகர விடுதி மானேஜர் திரு. இராமசாமி எல்லா உதவிகளும் செய்தார்.

கலைஞர் கருணாநிதி, பெருந்தலைவர் காமராஜர்

1972-ல் எனது மனைவியின் பெயரால் சென்னை வடபழனியில் கமலா திரையங்கைக் கட்டி முடித்து, திறப்பு விழாவிற்கு அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞரை அழைத்திருந்தேன். விழாவிற்குத் தலைமை தாங்க வந்திருந்தார் ராஜா சர். முத்தையா செட்டியார். அவரது தலைமையுரை முடிந்ததும் கலைஞர் பட்டனை அழுத்தி திரையைத் திறந்து வைக்கவேண்டும். அப்பொழுது யாரும் எதிர்பாராத விதமாக மேடையின் குறுக்கே ஓடிய ஒருவரின் கால் மின்சார வயரில் தட்ட, திரை திறந்து விட்டது. முதல்வர் இதை எப்படி எடுத்துக் கொள்வாரோ என்று குழம்பியபடி இருந்தேன். முதல்வர் பேச வந்தார். "நண்பர் சிதம்பரம் என்னை ரிப்பன் வெட்டி திரையரங்கைத் திறப்பதோடு, பட்டனை அழுத்தி திரையையும் திறந்து வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ரிப்பனை வெட்டி திரையரங்கை நான் திறந்து விட்டேன். என்னுடைய ராசி. விழாவிற்குக் கூட்டம் கூடிவிட்டது. ஆனால், திரையரங்கின் லாப-நஷ்டத்திற்கு நான் பொறுப்பல்ல. அந்த மின் வயரைத் தட்டியவர்தான் பொறுப்பு!". என்று தனக்கே உரிய நகைச்சுவையோடு சொல்ல, கூட்டத்தில் ஒரே கரவொலி! எனக்கோ டென்ஷனிலிருந்து பெரிய விடுதலை!

புதுக்கோட்டை இளவரசர் விஜயரகுநாத தொண்டைமான் எனது நெருங்கிய நண்பர். பெருந்தலைவர் காமராஜருக்கும் நெருக்க மானவர். அதனால் அவர் பெருந்தலைவரிடம் ஒருநாள் என்னை அழைத்துப் போய் அறிமுகப்படுத்தினார். மிக இயல்பாகப் பேசிக்கொண்டிருந்தார் பெருந்தலைவர். அதனால் உந்தப்பட்ட நான் அவரிடமிருந்து விடைபெறும்போது. "ஐயா, தாங்கள் என் திரையரங்கிற்கு ஒருநாள் படம் பார்க்க வரவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தேன். இதைக் கேட்டதும் இளவரசர் என்னை முறைப்பது போல் பார்த்தார். அந்தப் பார்வை. பெருந்தலைவரைப் போய்



1972-ல் சென்னை கமலா திரையரங்கை அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் திறந்துவைக்கும் காட்சி. அருகே திரு. ராஜா சர் முத்தையாச் செட்டியாரும் திரு. வி. என்.சிடி.யும்.

சினிமாக்கொட்டகைக்கு அழைக்கிறாயே என்பதுபோல் இருந்தது.

அதைக் கவனித்துவிட்டு பெருந்தலைவர், "ஏன் கோபப் படுறீங்கன்னே? சினிமா. நாடகக் கலைஞர்கள் ஒரு காலத்தில் வெள்ளையனை எதிர்த்து பிரசாரமெல்லாம் பண்ணி இருக்காங்கன்னேன். அவங்களை மதிக்கணும்னேன். ஆனா, எனக்கு படம் பாக்கெல்லாம் நேரந்தான் இல்லேன்னேன்."

"சிதம்பரம், உங்க தியேட்டரில் போடுற படங்கள் தேசபத்தியை வளர்க்கற – இளைஞர்களைப் பக்குவப்படுத்தற படமா இருக்கட்டும்னேன். லாபம் கொறச்சலா கெடச்சா பரவால்லேன்னேன்!" என்றார்.

பொறுப்புள்ள அந்தத் தலைவரின் அறிவுரைப்படி இன்றுவரை எனது திரையங்கில் செக்ஸ் படங்களைத் திரையிடுவதே இல்லை! அது பெருந்தலைவர் காட்டிய பாதை.

"வெற்றிக்கு ஒருவன்" படப்பிடிப்பு கமலா திரையரங்கில் நடைபெற்றது. நடிகர் திலகம் வெகுளிப்பிள்ளையாய் நடித்தார். தந்தை மேஜர் சுந்தர்ராஜன், தன் வெகுளிப் பிள்ளையிடம், 'கவுண்டரில் டிக்கெட் எடுத்துட்டு வா' என்று சொல்வார்.

தந்தை சொன்னபடி டிக்கெட் எடுக்க வரும் நடிகர் திலகம் கவுண்டரில் இருந்த என்னிடம் வந்து, 'கவுண்டரே! டிக்கெட் கொடுங்கள்' என்று கேட்க, அதற்கு, 'நான் கவுண்டரல்ல; செட்டியார்' என்று பதிலளிப்பேன். எனக்காகவே இப்படியொரு காட்சியை நடிகர் திலகம் அந்தப் படத்தில் சேர்த்து வெறும் தியேட்டர் முதலாளியாக இருந்த என்னை நடிகனாகவும் ஆக்கிவிட்டார்.

(திரு. வி.என். சிதம்பரம் எழுதிய "நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்" நூலிலிருந்து)

◆◆◆

மதுரை சங்கத்திற்கு புதிய தலைவர், புதிய துணைத் தலைவர்!

மதுரை நகரத்தார் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 11-5-96 சனிக்கிழமை மாலை டாக்டர் திரு. எஸ். சண்முகம் செட்டியார் தலைமையில் மதுரை நகர விடுதியில் நடைபெற்றது.

செயலாளர் திரு.ஆர். சொக்கலிங்கம் வரவேற்றுப் பேசி ஆண்டு அறிக்கை வாசித்தார். பொருளாளர் திரு. ஆர்.எம்.எம். அண்ணாமலை 1995-96 ஆம் ஆண்டின் வரவு-செலவுக் கணக்கைத் தாக்கல் செய்தார்.

மதுரை நகர விடுதி உருவாகரூ !.!!,!!!,- நன்கொடை வழங்கி. தூண்டுதலாக இருந்து 15-12-95ல் இயற்கை எய்திய பாகனேரி திரு. வே. மாணிக்கம் செட்டியாரின் திரு உருவப் படத்தை திரு. செ. செல்லப்ப செட்டியார் திறந்து வைத்தார்

டாகடர் திரு. எஸ். சண்முகம் செட்டியார் தமது உடல்நலம் கருதி பதவி விலகியதைத் தொடர்ந்து திரு.அ.சுப. அண்ணாமலை செட்டியார் (மேலைச் சிவபுரி) சங்கத்தின் புதிய தலைவராகவும் திரு. அன்பு. நா. சிதம்பரம் (கண்டனூர்) புதிய துணைத் தலைவராகவும் ஒரு மனதாகத் தேர்வு செய்யப் பெற்றனர்.

புதிய தலைவரும் புதிய துணைத்தலைவரும் ஏற்புரை வழங்கினர். அவ்விருவரும் மாலையணிவித்துக் கௌரவிக்கப் பெற்றனர்.

திருப்பரங்குன்றம் நகர விடுதியில் உள்ள மரகத விநாயகர் கோவிலில் விமானம் எழுப்பி திருப்பணி செய்து குட நீராட்டு நடத்த முடிவு செய்யப் பெற்றது. அத்திருப்பணிக்கு நன்கொடையாளா மூலம் அல்லது நன்கொடை மூலம் நிதி திரட்டுவது என முடிவு செய்யப் பெற்றது.

மதுரை நகரவிடுதியிலிருந்து நம்மினப் பெண்களின் திருமணத்திற்கு திருமணம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் ஓராண்டுக்கு 24 திருமணங்களுக்கு ரூ.24,000/- நன்கொடை வழங்க முடிவு செய்யப் பெற்றது.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சிவகங்கைத் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற திரு ப. சிதம்பரத்தின் வெற்றியைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

கூட்டுத் திருமணங்கள்

நாட்டுக் கோட்டை நகரத்தார் சார்பாக திருச்சி நகரத்தார் சங்கம் நடத்தி வைக்கும் கூட்டுத் திருமணம் ஸ்ரீ தாது ஆண்டு ஆவணித் திங்கள் 16ஆம் நாள் (1-9-1996) ஞாயிற்றுக்கிழமையன்று பிள்ளையார்பட்டியில் நடைபெறவிருக்கிறது.

இந்தக் கூட்டுத் திருமணத்தில் கலந்து கொண்டு பயன்பெற விரும்பும் மாப்பிள்ளை, பெண் வீட்டார்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொண்டு அதற்குரிய விண்ணப்ப படிவங்களைப் பெற்று நிறைவு செய்து 1-8-1996 க்குள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

செயலாளர், **நகரத்தார் சங்கம்**

2 ஒத்தமால் தெரு, திருச்சி-620 002. தொலைபேசி எண்: **702318 p.p.**

ஒழுக்கம்

ஒழுக்கம் உயர்வைத் தரும். ஒழுக்கமின்றேல் தன்மானம் கெடும். ஒழுக்கம் வாழ்க்கையின் ஒரு பகுதி.

தனக்கேற்பட்ட கடமையை ஒழுங்காகச் செய்வது ஒருவித ஒழுக்கம்.

தன்னால் மற்றொருவனுக்குத் தீங்குண்டாகாமல் நடந்துகொள்வது இன்னொருவித ஒழுக்கம்

பிறருக்கு உதவியாய் நடந்து கொள்வது மற்றொரு வித ஒழுக்கம்.

எப்பொழுதும் உண்மை பேசுவதுதான ஒழுக்கத்தின் சிகரம். அது உயிரையும் காப்பாற்றும்.

உயர்குலத்தில் பிறந்தவனானாலும் ஒழுக்கமின்றேல். கீழ்மகனாவான். கீழ்க்குலத்தில் பிறந்தவனானாலும், ஒழுக்கமுள்ளவன் மேன்மகனாவான்.

ஒழுக்கம் உயர்வனைத்தையும் மகிழ்ச்சியையும் தரும்.

வேலை செய்வதிலும், விளையாட்டிலும், பேசுவதிலும், ஒழுக்கம் வேண்டும். தவறினால் கஷ்டமும், நஷ்டமும் சண்டையுமுண்டாகும்; சண்டை செய்யும்போதும்கூட யுத்த தர்மத்தை அனுசரித்து நடப்பவனே ஒழுக்கமுள்ளவன்.

ஒழுக்கத்தைச் சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே பயிற்றுவிக்க வேண்டும்; சிறு பருவத்தில் ஒழுக்கம் கெட்டு நடந்தால், திருந்துவது கடினம்.

தான் ஒழுங்காய் நடப்பது தனக்குத் தெரியாது. தான் செய்யும் காரியம் ஒவ்வொன்றும் தனக்கு ஒழுங்காய்ச் செய்த மாதிரிதான் தெரியும். தன்னைப்பற்றிப் பிற பெரியோர்களை விசாரித்து அறிந்து கொண்டால்தான் உண்மை தெரியும்.

உள்ளும் புறமும் ஒத்து நடப்பதுதான் நேர்மையான முறை. மனதில் கெட்டதை வைத்து வெளியே ஒழுக்கமாயிருப்பது போல காட்டிக்கொள்வது ஒழுக்கம் கெட்டு நடப்பவனைவிடக் கீழ்த்தரமானது.

ஒழுக்கம் உலக மக்களுடன் இணங்கி வாழ ஜீவ நாடியாயிருப்பதால், எல்லாவகையிலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.


படிப்பும் பணமும் இல்லாவிட்டாலும் கூட ஒழுக்கம் இருக்கவேண்டும். படிப்பும், பணமும், கஷ்டப்பட்டால் தான் வரும். சில சமயம் கஷ்டப்பட்டாலும் வராது. ஆனால் ஒழுக்கத்தைச் சிரமமில்லாமலேயே பழக்கத்துக்குக் கொண்டுவரலாம்.


ஒழுங்காகக் கடமையைச் செய்தவன் பரிசுபெறுவதைப்போல, ஒழுங்கீனமாய் நடந்துகொண்டவனும் அதற்குத்தகுந்த தண்டனைப பரிசைப் பெற்றுத்தான் தீரவேண்டும். இது இயற்கை நியதி.

மனிதனின் எல்லா ஒழுக்கங்களும், தன்நல மறுப்பு என்னும் கொள்கை அடிப்படையைக் கொண்டே நிற்கின்றன. அதுவே நல்வாழ்க்கையின் திறவுகோல்.

ஒழுக்கம் தவறி நடப்பவனை அவன் குடும்பத்தாரும் ஊராரும் உலகத்தாரும் மதிக்கமாட்டார்கள்.

ஒழுக்கத்தை விரும்புகின்றவன் சுற்றுப்புறச் சூழ்நிலையை ஒழுங்காக வைத்துக்கொள்வதுடன், ஒழுங்கான நிலையிலுள்ளவர்களிடமும், பழக்கம் வைத்துக்கொள்ளவேண்டும்.


TITAN
QUARTZ



ஒழுக்கத்துடனிருக்க பணக்காரனாயும், படிப்புள்ளவனாயும், மேல் ஜாதிக்காரனாயும், இருக்கவேண்டுமென்பதில்லை. ஏழையும் பலஹீனனும் கூட ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கலாம்.

புற ஒழுக்கத்தைக் காட்டிலும், மன ஒழுக்கமே மிக மேலானது. மன ஒழுக்கம் தவறி நடப்பவன் புற ஒழுக்கமும் தவறித்தான் நடப்பான்.

ஒருவன் ஒழுக்கத்துக்கு முதல் இடமும், மகிழ்ச்சிக்கு இரண்டாவது இடமும், பணத்துக்கு மூன்றாவது இடமும் அளிக்கவேண்டும்.

வாழ்வில் ஒழுங்கைக் கடைப்பிடிப்பவர்கள், தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவைகளை முன்கூட்டியே சிந்தித்துக் திட்டமிட்டு விடுவதால், பின்னால் வருந்தமாட்டார்கள்.

ஒழுக்கத்தை உயிரைவிட மேலாக மதிப்பவனுடைய வாழ்க்கை உலகத்தில் புகழுடன் விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

(திரு. சி.யு. நஞ்சப்பா எழுதிய "உலக அனுபவங்கள்" என்ற நூலிலிருந்து)

சிங்கப்பூர் அறப்பணிக் கழகம்

சிங்கப்பூர் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகத்தின் பொதுக் குழுக் கூட்டம் 8-4-96 அன்று நடைபெற்றது. அப்போது மேறபடி அறப்பணிக் கழகத்தின் தலைவராக காரைக்குடி திரு.ராம. வீர பெரி. பெரியகருப்பன் செட்டியாரும் துணைத் தலைவராக திரு.வ.சுப.நா. நாச்சியப்ப செட்டியாரும் (பி. அழகாபுரி) செயலாளராக திரு. மு. சே. சுப. சுப்பையா செட்டியாரும் (பொன். புதுப்பட்டி) மற்றும் 18 பேர் செயற்குழு ஊறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

இரசிகமணி இராம. சிதம்பரம் செட்டியார்

"திருவிளக்குப் பூஜை நடத்த வேண்டுமா, வைரம், தங்கம் போன்றவற்றை மதிப்பிட வேண்டுமா. அழகிய முறையில் கட்டிடங்களைக் கட்ட வேண்டுமா?" – "பாருங்கள் சீனாதானாவை!" என்று சொல்லுமளவு எல்லாவற்றிலும் மிகுந்த அனுபவம், திறமை பெற்றவர், 'இரசிகமணி' இராம. சிதம்பரம் செட்டியார் அவர்கள்.


'இரசிகமணி' திரு. இராம. சிதம்பரம் செட்டியார், கொ. லெட்சுமிபுரத்தில் திரு. க.ப. இராமநாதன் செட்டியார் – திருமதி மீனாட்சி ஆச்சி தம்பதியருக்கு 2–6–1926–ல் திருமகனாகப் பிறந்தார். பிறந்தபோதே ஏழு பெண்களுக்குப் பிறகு எட்டாதவதாகப் பிறந்த 'அரசு' என்ற பெருமையைப் பெற்றார்.

மாத்தூர்க் கோவில் கருப்பூர் பிரிவைச் சேர்ந்த திரு. சீனாதானா அதிகம் படிக்கவில்லை என்றாலும் பல விஷயங்களில் திறமைசாலி.

வைரம், தங்கம், வெள்ளி ஆகியவற்றை மதிப்பிடுவது; கட்டிடங்களுக்கு வரைபடம் போடுவது; அழகிய கட்டிடங்களை உருவாக்குவது மட்டுமல்ல; நீதி மன்ற நடவடிக்கைகளிலும் வல்லவராகத் திகழ்கிறார்.

பணிகள்

திரு. சிதம்பரம் செட்டியார், தொடக்கத்தில் ஏழு ஆண்டுகள் வட்டிக் கடையில் இருந்தார்: பின் திருவனந்தபுரத்தில் டிரஸ்ட் ஆஃப் இந்தியா என்கிற இன்சூரன்ஸ் நிறுவனத்தில் மூன்று ஆண்டுகள் ஆய்வாளராகப் பணி செய்தார். 1954 முதல் ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் அலுவலகத்தில் எழுத்தர், பணப் பொறுப்பளார், கணக்காளர், நிர்வாகி, தலைமை நிர்வாகி என படிப்படியாகப் பல பதவிகளில் பணி செய்து அந்த நிறுவனத்தைப் பெரிய அளவில் வளர்த்து தானும் வளர்ச்சி பெற்றார். 1993–ல் அதிலிருந்து ஓய்வு பெற்றார். இவர் ஓய்வு



'இரசிகமணி' திரு. இராம. சிதம்பரம் செட்டியாரும் திருமதி முத்தம்மாள் ஆச்சியும்.



ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிட்.டின் வெள்ளி விழாவில் (1972) திரு. இராம. சிதம்பரம் செட்டியாருக்கு திரு. இராம. அருணாசலம் செட்டியார் பரிசு வழங்கும் காட்சி

பெறும்போது 27 கிளை நிறுவனங்களை நிர்வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பட்டங்கள்

இவர் பணியில் இருந்த போது நிறுவனத் தொழில் முறை, நல்ல நிர்வாகம், தொழில் வளர்ச்சி ஆகியவை பற்றி ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் நடத்திய போட்டிகளில் ஏராளமான முதல்பரிசுகளையும் 'சீட்டுக்கு ராஜா', 'மதுரை பாண்டியன்' 'சூப்பர் ஸ்டார்' ஆகிய பட்டங்களையும் பெற்றுள்ளார்.

திருவிளக்குப் பூஜை

காசியில், கொ. லெட்சுமிபுரத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில், பக்தி நெறி மன்றத்தில் என்று எங்கு திருவிளக்குப் பூஜை நடந்தாலும் அங்கு திரு. சீனாதானா அவர்களைத் தலைமையாகப் பார்க்கலாம்.



ஸ்ரீ விசா[illegible]ம் சிட் பண்ட் லிமிடெட் வெள்ளி விழாவில் அன்றைய மதுரை வங்கியின் தலைவர் திரு. எல். கிருஷ்ணன் திரு. இராம. சிதம்பரம் செட்டியாருக்குப் பரிசு வழங்கும் காட்சி இருவருக்கும் மத்தியில் அன்றைய நிர்வாக இயக்குநர் திரு. அரு. இராமசாமிச் செட்டியார்.



60ஆம் ஆண்டு நிறைவு மணி விழாவில் திரு. சீனாதனா தம்பதியருடன்
திரு. சித. நடராஜன் மற்றும் குடும்பத்தினர்

கூடவே அவர்களது துணைவியார் திருமதி முத்தம்மாள் ஆச்சியையும் காணலாம்.

கட்டிடக் கலை நிபுணர்

கட்டிடக்கலையில் நிபுணரான திரு. சீனாதானா காவிரிப்பூம்பட்டினத்தில் கட்டிடக் குழுத் தலைவராக இருந்து சாப்பாட்டுக் கூடத்தை கட்ட உறுதுணையாக இருந்தார். காவிரிப்பூம்பட்டினம் பல்லவனீச்சுரக்கோவிலில் அண்மையில் நடைபெற்ற திருப்பணி வேலைகளையும் ராஜ நாராயணப் பெருமாள் கோவில் திருப்பணி வேலைகளையும் மேற்பார்வையிட்டார். இப்போது காவிரிப்பூம்பட்டினம் அருகில் உள்ள நெய்தவாசல் சாயாவனம் கோவில் திருப்பணி வேலைகளில் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

இறைத் தொண்டு


கொ. லெட்சுமிபுரம் சிவன் கோவில் திருப்பணிக் குழுத் தலைவராக இருந்து இவர்கள் பெரும் தொகை நன்கொடை வழங்கி சிறப்பாகக் குட நீராட்டு விழாவை நடத்தியதை (1987-ல்) நகரத்தார்கள் நன்கு அறிவார்கள்.

மதுரை எல்லிஸ்நகரில் உள்ளலிமுத்து மாரியம்மன் கோவிலின் திருப்பணிக் குழுத் தலைவராக இருந்து 21-4-96 அன்று குட நீராட்டு விழாவை நடத்தியிருக்கிறார்கள்.

கலாமடம் - பாதரக்குடி ஆதினத்தில் 'அறிநெறி அண்ணல்' பட்டம் பெற்ற இவர்கள், துலாவூர் கட்டிடக் குழுத் தலைவர்; பக்தி நெறி மன்றத் தலைவர்; நகரத்தார் சுயம்வரக்குழுத் தலைவர் என பல பொறுப்புகளில் இருந்து தொண்டாற்றி வருகிறார்கள்.

மணி விழா

இவர்களது 60ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 30-5-86 அன்று கொ. லெட்சுமிபுரத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இவர்கள் தமது 51ஆவது வயதிலிருந்து (சர்வாதிஷ்ட சாந்தி) ஆண்டு தோறும் குடும்பத்துடன் பல திருக்கோவில்களுக்குச் சென்று வழிபாடு செய்து எழை எளியவர்களுக்கு என்னதானம் ஆடைதானம், பள்ளிப் பிள்ளைகளுக்கு நோட்டுப் புத்தகம், எழுது பொருள் ஆகியவற்றை வழங்கி வருகிறார்கள்.



குற்றலத்தில் திரு. இராம. அருணாசலம் செட்டியார் திருமதி. மீனாட்சி அருணாசலம் மற்றும் உறவினர்களுடன் திரு. சீனாதானா தம்பதியர்.

திரு. சீனாதானாவின் துணைவியார் திருமதி முத்தம்மாள் ஆச்சி இராயவரம் திரு. கு.மு. குமரப்ப செட்டியார் – திருமதி அழகம்மை ஆச்சியின் புதல்வியாவார். இவர் தன் கனிவான அன்பினாலும் கண்டிபப்பான குணத்தாலும் தம் குடும்பத்தை முன்னேறச் செய்த பெண்ணரசி ஆவார்.

திரு. சீனாதானாவுக்கு கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் என்றால் கொள்ளைப் பிரியம். இரவு எத்தனை மணியானாலும் அவற்றைப் பார்க்காமல் வீடு திரும்பமாட்டார்கள். அதுபோல் புலவர்கள், தமிழறிஞர்களிடம் பாசமாக இருப்பார்கள்.

"எனது முன்னேற்றத்திற்கு என் மைத்துனர்கள் மூவரும் துணைபுரிந்தார்கள்" என நன்றியோடு இவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

குடும்பம்

இவர்களுக்கு திரு. சித. நடராஜன் திரு. சித. குமரப்பன் என இரு புதல்வர்களும் திருமதி மீனாள் அழகப்பன், திருமதி சகுந்தலா பெரியகருப்பன், திருமதி அழகம்மை இராமநாதன் என மூன்று பெண்களும் பேரன் பேத்திகளும் உள்ளனர். திரு. நடராஜன் ஸ்ரீவிசாலம் சிட் பண்ட் லிட்டின் இயக்குநர். திரு. குமாரப்பன் தொழில் செய்து வருகிறார்.

திரு. சீனாதானா தம் குடும்பத்தாருடன் 17 ஆண்டுகளாக வாரணாசி சென்று தீபாவளித் திருநாளன்று கங்கையில் நீராடி வருகிறார்கள்.

திரு. சீனாதானா – திருமதி. முத்தம்மாள் ஆச்சியின் 70ஆம் ஆண்டு நிறைவு விழா (பீமரத சாந்தி) கொ. லெட்சுமிபுரத்தில் நாளது வைகாசி மாதம் 26ஆம் நாள் (8–6–96) சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. இதனையொட்டி பட்டிமண்டபம், கவியரங்கம் வாழ்த்தரங்கம் ஆகியவை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"நகரத்தார் குரல்" இதழின் ஆலோசனைக்குழு உறுப்பினரான திரு. சீனாதானா அவர்கள் மேலும் சிறப்புப் பெற வாழ்த்துவோம்.

சந்திப்பு: எல். சுந்தரம்.

கன்னித் தமிழுக்குக் கதி சுந்தரனார்

டாக்டர் சபா. அருணாசலம்

முத்துவிளை மதுரையிலே முத்தமிழால் புகழ்பெற்ற
முத்தமிழ் மணியாவார்! முறையாகத் தமிழறிவார்!
சின்ன உருவம் சிங்கம்போல் பெருமிதம்
மன்னர் போல்நடை! மகிழும் சிரித்தமுகம்
உள்ளம்போல் வெள்ளாடை! உரத்த குரல்சிரிப்பு
கள்ளமறியா மனங்காட்டும் கறந்த பாலாகும்!
கருமுத்து தேடிவந்த கடல்முத்து கதிஅய்யா
சிரிப்பே இவர்சொத்து! செந்த மிழில் வல்லினமும்
மெல்லினமும் உள்ளபடி மேலாக உச்சரிக்கும்
வல்லமை அய்யாவின் வளமான தமிழ்ப்புலமை!

தமிழே சுவை என்பார்

வலையபட்டி மாநகரில் வந்துதித்த சுந்தரனார்.
கல்வியைக் கண் என்பார், கடமையைப் பொன் என்பார்.
எளிமையை வாழ்வென்பார், பேச்சே உயிரென்பார்.
தொழிலைப் புனிதமென்பார். நேரத்தை மிக மதிப்பார்.
மடமையை வெறுத்திடுவார், மாணவரைப் போற்றிடுவார்.
தமிழ்மேல் பற்றுடையார், தமிழே சுவை என்பார்.

- கதி. சு. கதிரேசன், B.E.,

உங்கள் குரல்

ஏப்ரல் '96 "நகரத்தார் குரல்" பேராசிரியர் கதி. சுந்தரனாரின் சிறப்பிதழாக சிறப்புடன் வெளி வந்துள்ளமை குறித்துப்பெரிதும் மகிழ்கின்றேன்.

பேராசிரியரோடு நெருங்கிய தொடர்புடையவர்கள் கூட அறிந்திராத அருமையான செய்திகளையெல்லாம் இம்மலர் மூலம் அறிந்து இன்புற்றேன்.

கருமுத்து குடும்பத்தின்பால் பேராசான் கொண்டுள்ள அன்பு அவரது குருதியுடன் கலந்த மாசற்ற அன்பாகும். நன்றியுடன் அவர்களை என்றும் பாராட்டும் நல்லறிஞர் கதி. சுந்தரனார் வாழ்க பல்லாண்டு!

சி. சுப்பையா செட்டியார்
சென்னை

மானகிரியில்
சனிப்பெயர்ச்சி விழா

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் மானகிரியில் சுப்பிரமணியசுவாமி கோவிலில் உள்ள கல்யாண நவக்கிரகத்திற்கு 25-4-96 அன்று கோவிலூர் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் தலைமையில் சனிப் பெயர்ச்சி விழா சிறப்பாக நடைபெற்றது அன்று இலட்சார்ச்சனையும் நடைபெற்றது.

முன்னதாக கோவிலூர் சுவாமிகளுக்கு பூரண கும்ப மரியாதை செய்யப் பெற்றது. நகரத்தார் நற்பணி மன்றத் தலைவர் திரு. கே.ஆர். ஆறுமுகம் செட்டியார், செயலாளர் திரு. லெ. சண்முகம் செட்டியார், பொருளாளர் திரு. என்.எஸ். நாச்சியப்ப செட்டியார் ஆகியோர் சுவாமிகளை வரவேற்றனர்.

நூல் மதிப்புரை
வயிரவன் கோவில் குடநீராட்டு விழா மலர்

நகரக் கோவில்கள் ஒன்பதில ஒன்றான வயிரவன் கோவில் குடநீராட்டு விழாவை ஒட்டித் தயாரிக்கப் பெற்றுள்ள இச்சிறப்புமலர் 286 பக்கங்களைக் கொண்டுள்ளது. முகப்பு அட்டைப்படமும் உள்ளே இருக்கிற வயிரவர் சுவாமி படமும் மற்ற சுவாமி படங்களும் நிகழ்ச்சிப் படங்களும் கண்களைக் கவரும் வகையில் அழகிய வண்ணத்தில் அச்சிடப் பெற்றுள்ளன.

இம்மலரில் திருப்பணிக் குழுத் தலைவர் திரு.எஸ்.ஆர்எம்.பிஎல். சுப்பிரமணியன் செட்டியார், செயலாளர் திரு.ஆர்எம். சுப்பிரமணியன் செட்டியார், பதிப்பாசிரியர்களான முனைவர் திரு. சுப. அண்ணாமலை முனைவர் திரு. ச. மெய்யப்பன் ஆகியோரது கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

வயிரவன் கோவில் நகரத்தார் செய்துள்ள திருப்பணி விவரங்கள் இம்மலரில் காணப்படுகின்றன. பைரவர் பற்றிய அருமையான கட்டுரையும் உண்டு. வயிரவன் கோவில் புராணம், வயிரவன் கோவில் வரலாறு ஆகியவை மிகச் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளன. இம்மலரில் முனைவர் திரு. தமிழண்ணனின் 'வழித்துணை முருகன்' கட்டுரையும் முனைவர் திரு.தே. சொக்கலிங்கத்தின் 'ஏழகப் பெருந்திரு' கட்டுரையும் திரு. சொ.சொ.மீ. சுந்தரத்தின் 'பண்டிதமணி பிள்ளைத் தமிழ்' கட்டுரையும் முனைவர் திரு. வ. தேனப்பனின் 'வயிரவன பட்டி பற்றிய சுவையானசெய்திகள் கட்டுரையும்மற்றும்பல நல்ல கட்டுரைகளும இடம் பெற்றுள்ளன.

சமயச் சொற்களஞ்சியம் தொகுப்பு பல பயனுள்ள தகவல்களைத் தருகிறது. 'நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் வாழும் ஊர்கள்; தொலைவும் வழியும்' என்ற தலைப்பில் முனைவர் திரு. கரு. முத்தையா தொகுத்து வெளியிட்டுள்ள குறிப்பு பயன்மிக்க அரிய முயற்சி என்றே கூறலாம். உதாரணமாக காரைக் குடியிலிருந்து உலகம்பட்டி எத்தனை கிலோ மீட்டர்கள் தொலைவில் இருக்கிறது; காரைக்குடியிலிருந்து கொப்பனாபட்டி எத்தனை கிலோ மீட்டர்கள் தொலைவில் இருக்கிறது. அந்த ஊர்களுக்கு எந்தெந்த ஊர்கள் வழியாகச் செல்ல வேண்டும் என்பது போன்ற குறிப்புகள் 74 ஊர்களுக்கும் விவரமாக உள்ளன.

குறுகிய காலத்தில் அருமையான மலரை உருவாக்கிய முனைவர் திரு. சுப. அண்ணாமலையும் முனைவர் திரு.ச. மெய்யப்பனும் பாராட்டுக்குரியவர்கள்.

பல பயன்மிக்க கட்டுரைகளையும் செய்திகளையும் கொண்டுள்ள இம்மலரின் விலை ரூ. 50-00 ஆகும். வயிரவன் கோவிலில் இது இப்போது கிடைக்கிறது.

– "எல்லெஸ்"

மணிவிழா

காரைக்குடியைச் சேர்ந்தவரும் திருப்புத்தூர் வழக்கறிஞர் சங்கத் தலைவருமான திரு. மா. முத்தையா - திருமதி பொற்கொடியாள் ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு பணி விழா காரைக்குடி முத்துவிலாஸில் 7-4-96 அன்று சிறப்பாக நடைபெற்றது.

கல்விக்கு நிதி உதவி: அறிவிப்பு


ப்ளஸ்-டூ தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று பட்டப்படிப்பு படித்து வரும் மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள், அவர்களுடைய அறக்கட்டளையிலிருந்து கல்வி நிதி உதவியாக ரூ. 5,000 வரை வழங்க இருக்கிறார்கள். மாணவ, மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 15,000 க்குள் இருக்க வேண்டும். பெற்றோர் வேலை பார்க்கும் நிறுவனத்திலிருந்து வருமானச் சான்றிதழ் பெற்று அனுப்பி வைப்பதுடன், இவ்வாண்டு கல்லூரியில் சேர்ந்து படித்து வருவதற்கான அத்தாட்சிக் கடிதம், ப்ளஸ்-டூ மதிப்பெண் நகல் முதலியவற்றை இணைத்து செயலாளர், நகரத்தார் ஐக்கிய சங்கம், 88, பவளக்காரத் தெரு, சென்னை - 600 001 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

கல்வி நிதி உதவி: அறிவிப்பு

ப்ளஸ்-டூ தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள், அவர்களுடைய அறக்கட்டளையிலிருந்து கல்வி நிதி உதவியாக ரூ. 5,000/- வரை ஆண்டு ஒன்றுக்கு வழங்க இருக்கிறார்கள். மாணவ மாணவியர் தங்கள் ஊர், பெற்றோர் பெயர், கோயில், பிரிவு மற்றும் முகவரியுடன் இவ்வாண்டு கல்லூரியில் சேர்ந்து படித்து வருவதற்கான அத்தாட்சிக் கடிதம், ப்ளஸ்-டூ மதிப்பெண் நகல் முதலியவற்றை இணைத்து செயலாளர், நகரத்தார் ஐக்கிய சங்கம், 88, பவளக்காரத் தெரு, சென்னை- 600 001 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப் பெற்றிருக்கிறார்கள்.

முனைவர் இராம. இலக்குவன்

மதுரை சரசுவதி நாராயணன் கல்லூரியில் தமிழ்த் துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றிவரும் திரு. இராம. இலக்குவன் 'க.நா. சுப்பிரமணியனின் திறனாய்வுப் பணிகள் - ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் ஆய்வு செய்து அண்மையில் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்திலிருந்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.



மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழியல் புலத்தின் புத்திலக்கியத் துறைத் தலைவர் முனைவர் திரு. சு. வேங்கடராமன் வழிகாட்டுதலில் ஆய்வுப் பட்டம் பெற்றுள்ள திரு. இலக்குவன் தேவகோட்டை ஊரினர். இளையாத்தக்குடி ஒக்கூர் பிரிவு மரபினர்.

கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற இலக்கிய அரங்குகளில் பங்கு பெற்று வருபவர். 'அவள் ஓர் அஜந்தா ஓவியம்' என்று சிறுகதைத் தொகுப்பும் 'கோடுகளைத்தேடும் புள்ளிகள்' என்ற புதினமும் இவர்தம் படைப்புகள்.

திரு. இலக்குவனைப் பாராட்டுவதோடு அவர் மேலும் சிறப்புப் பெற வாழ்த்துவோம்.

எஸ்பி. கல்யாணசுந்தரம்

திரு.எஸ்பி. கல்யாணசுந்தரம் செட்டியார் மதகுபட்டியில் பிறந்தவர். வயிரவன் கோவிலைச் சேர்ந்தவர். இவரது தந்தையார் - திரு.சொ. சுப்பிரமணியன் செட்டியார் - தாயார் - கண்ணாத்தாள் ஆச்சி. மனைவி - திருமதி வசந்தாள் ஆச்சி.

இவர் தன்னுடைய B.E படிப்பை மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரியிலும் M.Sc. (Engg.)ஐ கோவை பி.எஸ்.ஜி. காலேஜ் ஆஃப் டெக்னாலஜியிலும் M.B.F. ஐ டில்லி திறந்தவெளிப் பல்கலைக்கழகத்திலும் P.G. டிப்ளமாவை ஆட்வேன் டிரெயினிங் இன்ஸ்ட்டிடியூட்டிலும் கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

தொழிலதிபரான இவர், சென்னையில் உள்ள அக்கியூரேட் ஸ்டீல் பார்கிங்ஸ் இந்தியா லிமிடெட், அக்கியூரேட் போர்ஜ் பி. லிமிடெட். அக்கியூரேட் வால்வ் புராடக்ட்ஸ் பி.லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் நிர்வாக இயக்குநராகவும் எஸ்பிகே கன்சல்டன்ஸி சர்வீஸ் எஸ்பிகே அக்ரோ டெக் பார்ம். எஸ்பிகே ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆகிய நிறுவனங்களின் உரிமையாளராகவும் இருந்து கவனித்து வருகிறார்கள்.

சிறந்த சிறு தொழில் அதிபர் என்று International Labour Organisation தேர்வு செய்து 1988ல் இவரைக் கௌரவித்திருக்கிறது.

வல்லடிகாரர் சுவாமி கோவில், வயிரவன் கோவில், மதகுபட்டி சிவன் கோவில், திருக்கழுக் குன்றம் கோவில ஆகியவற்றின் குட நீராட்டு விழாக்களுக்கும் மற்றும் பல நல்ல காரியங்களுக்கும் இவர்கள் மனமுவந்து நன்கொடை வழங்கியிருக்கிறார்கள் வழங்கியும் வருகிறார்கள்.

கல்வித்தகுதிக்கேற்ப அடக்கமும் மனிதர்களை மதிக்கும் பண்பும் வசதிக்குறைவானவர்களின் துயர் கண்டு



சிறந்த தொழிலதிபருக்கான I.L.O விருதை தமிழகத்தின் முன்னாள் சட்டத்துறை அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி வழங்க திரு. எஸ்பி. கல்யாண சுந்தரம் பெறும் காட்சி

இரங்கும் மனமும் கொண்ட திரு. எஸ்பி. கல்யாணசுந்தரம் நமது பெண்களின் திருமணத்திற்கும் வசதியற்ற குழந்தைகளின் கல்விக்கும் மனமுவந்து தாராளமாக நன்கொடை வழங்கி வருகிறார்.

பல நல்ல காரியங்களுக்கு நன்கொடை வழங்கிவரும் இவர் தமது ஊரான மதகு பட்டியில் பேருந்துகளுக்காகக் காத்துக் கிடக்கும் மக்கள் சௌகரியமாக அமர்ந்திருக்கும் பொருட்டு தங்குமிடம் ஒன்றை அழகாகக் கட்டித் தந்திருக்கிறார்.

பூச்சொரியல் விழா

சோழவந்தான் அருள்மிகு ஜெனகை மாரியம்மனுக்கு நகரத்தாகளால் 28 ஆம் ஆண்டாக 17-5-96 அன்று பூச்சொரியல் விழா சிறப்பாக நடைபெற்றது. இதனை யொட்டி மேளக்கச்சேரி, வாணவேடிக்கை -கள் நடைபெற்றன. விழா ஏற்பாடுகளை நகரத்தார் குழுத் தலைவர் திரு.என். திருப்பதி செட்டியாரும் திரு. இராஜேந்திரனும் நல்லமுறையில் செய்திருந்தனர்.

ஆன்மீகச் சோலை

பாதரக்குடி ஆதீனத்தில் 21-4-96 மாலை ஆன்மீகச் சோலையின் 13ஆவது நிகழ்ச்சி நடைபெற்றது. 'அறமனச் செம்மல்' திரு. நா. இராமசாமிச் செட்டியார் தலைமை தாங்கினார். 'காசிஸ்ரீ' திரு.அரு.சோ. வரவேற்றார். கவிஞர் திரு. கதிரவன் 'பாரதியாரும் ஆன்மீகமும்' பற்றி ஆன்மீக உரையாற்றினார்.

பட்டினத்தடிகள் திருவிழா!

காவிரிப்பூம்பட்டினத்தில் ஸ்ரீ பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா நாளது ஆடித்திங்கள் 5ஆம் நாள் முதல் 16 ஆம் நாள் வரை (20-7-96 முதல் 31-7-96 வரை 12 நாட்கள் நடைபெற உள்ளது.

நூலகப் புரவலர் நியமனம்

கண்டவராயன்பட்டியிலுள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கிளை நூலகத்திற்கு கவிஞர் திரு.சே. கனகசபை 18-5-96 அன்று ரூ. 1000 புரவலர் நன்கொடையாக வழங்கினார். இதை ஒட்டி அவரைத் தமிழக அரசு நூலகப் புரவலராய் நியமித்துள்ளது.

அறப்பணிக் கழக பொதுக் குழு

தைப்பிங் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் 23-6-96 ஞாயிறு மாலை 3 மணிக்கு வலையபட்டி நகரத்தார் விடுதியில் நடைபெறும் என அதன் செயலாளர் திரு.பி.வி. ஆர்.எம். வள்ளியப்பன் அறிவித்திருக்கிறார்.



செய்திகள்

வாசிப்பவர்: எல். சுந்தரம்

ஃ நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் கோவிலின் வைகாசித் திருவிழாவிற்கு 23-5-96 அன்று காப்புக் கட்டப்பெற்றது. 30-5-96 அன்று வெள்ளி ரத ஓட்டமும் 31-5-96 (வைகாசி விசாகம்) அன்று தேரோட்டமும் சிறப்பாக நடைபெற்றன.

ஃ காளையார்கோவில் ஸ்ரீ சௌந்தர நாயகி அம்பாள் சமேத ஸ்ரீ சோமேசுவரர் திருக்கோவிலின் வைகாசித் திருவிழா 22-5-96 அன்று தொடங்கி 31-5-96 வரை சிறப்பாக நடைபெற்றது.

ஃ விரையாச்சிலை சிவன்கோவிலின் குடநீராட்டு விழா 58 ஆண்டு களுக்குப்பின் ஆவணித் திங்கள் 16ஆம் நாள் (1-9-96) ஞாயிறு காலை 9-10 மணி முதல் 10-10க்குள் நடைபெற உள்ளது.

ஃ தேவகோட்டை கருதா ஊரணி ராம.மெ. வகையறா குரு பூஜை மடத்தில் 11-5-96 அன்று திருநாவுக்கரசு சுவாமிகளிள் குருபூஜை நடைபெற்றது. அன்று காலை 'திருநாவுக்கரசு சுவாமிகளின் அற்புதங்கள்' என்ற தலைப்பில் திரு. நா. சுப்பிரமணியன் உரை நிகழ்த்தினார்.

ஃ புதுக்கோட்டையில் புதிதாகக் கட்டப்பெற்றுள்ள நகர விடுதியை டாக்டர் ஏ.சி. முத்தையா அவர்கள் 19-5-96 அன்று திறந்து வைத்திருக்கிறார்கள்.

ஃ கீழச்சிவல்பட்டி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் குட நீராட்டு விழாவின் மலர் வெளியீட்டு விழா 19-5-96 மாலை சிறப்பாக நடைபெற்றது.

ஃ மானாமதுரையில் உள்ள ஒக்கூர் வெள்ளையன் செட்டியார் தொடக்கப் பள்ளி மற்றும் நர்சரிப் பள்ளியின் ஆண்டு விழா ஒ.வெ. செ. மேனிலைப் பள்ளி கலையரங்கில் 17-4-96 மாலை சிறப்பாக நடைபெற்றது.

ஃ துறையூர் ஆதீனத்தில் 15-5-96 முதல் 21-5-96 வரை ஒரு வார காலம் சேக்கிழார் அருளிய 'பெரிய புராணம்' வகுப்பு நடைபெற்றது.

நகரத்தார் பெரும்பேடு பாத யாத்திரைக் குழு

பொன்னேரியிலிருந்து 9 கி.மீ. தொலைவில் உள்ள பெரும்பேடு என்ற கிராமத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு பூமியிலிருந்து கண்டெடுக்கப் பெற்ற வள்ளி - தெய்வானையுடன் கூடிய ஸ்ரீ முருகப் பெருமானுக்கு மக்கள் அங்கு 'முத்துக் குமார சுவாமி' என்ற பெயரில் ஒர் ஆலயம் எழுப்பியுள்ளனர். இந்த ஆலயத்திற்கு 1991 ஆம் ஆண்டு முதல் நகரத்தார் பாதயாத்திரை சென்று வருகின்றனர். 'நகரத்தார் பெரும்பேடு பாதயாத்திரைக் குழு' என்ற அமைப்பை உருவாக்கி திருவொற்றியூரிலிருந்து காவடி கட்டி 39 கி.மீ. தொலைவு பாதயாத்திரையாகச் சென்று வைகாசி விசாகத் திருநாளில் காவடி செலுத்தித் தரிசித்து வருகின்றனர். (இத்தலத்தின் சிறப்பு இங்கு வள்ளியும் தெய்வானையும் இடம் மாறி இருப்பது தான்).

நகரத்தார் 6 ஆம் ஆண்டாக 29-5-96 அன்று மாலை திருவொற்றியூர் எல்லை அம்மன் ஆலயத்திலிருந்து காவடி கட்டிப் புறப்பட்டு பொன்னேரி வழியாக 31-5-96 அன்று பெரும்பேடு சேர்ந்து ஸ்ரீ முத்துக்குமார சுவாமிக்கு பால் குடங்கள். காவடிகள் செலுத்தினர். பின் அபிஷேக, ஆராதனை செய்து பகல் அன்னதானம் முடித்து ஊர் திரும்பினர்.

உதகை நகரத்தார் சங்கம்

உதக மண்டலம் நகரத்தார் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் 28-4-96 அன்று டாக்டர் திரு. சே. பனையப்பன் இல்லத்தில் திரு. மெ. அண்ணாமலை செட்டியார் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் டாக்டர் திரு. சே. பனையப்பன் ஆண்டறிக்கை வாசிக்கப் பொருளாளர் திரு. கு.மு. நாராயணன் நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து சங்கத்திற்கு திரு. கு.மு. பழநியப்பன் தலைவராகவும் திரு. தே. இராமநாதன் துணைத் தலைவராகவும் திரு. ஆறு. இராமநாதன் செயலாளராகவும் திரு. நா. மெய்யப்பன் துணைச்செயலாளராகவும் திரு. கு.மு. நாராயணன் பொருளாளராகவும் ஒரு மனதாகத் தேர்வு செய்யப் பெற்றனர்.

பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
16-2-1930

மறைவு
27-6-1981

லெட்சுமி M. சிங்காரம் செட்டியார்

அச்சடிக்கும் காகிதத்தின் அரசர் ஆனார்
அறப்பணிகள் தொடங்குங்கால் அமரர் ஆனார்
நிச்சயமாய் லெட்சுமி சிங்காரம் செய்த
நிகரில்லாத் தனிச்சேவை நெஞ்சில் நிற்கும்

◆◆◆

லெட்சுமி பேப்பர் ஸ்டோர்ஸ்

38, கீழ ஆவணி மூல வீதி,
மதுரை-625 001.
தந்தி: 'Paper Queen' தொலைபேசி: 622252 & 621763
(இல்லம்) 46328

◆◆◆

லெட்சுமி பேப்பர் ஏஜன்சீஸ்
செல்வலெட்சுமி பேப்பர் ஏஜன்சீஸ்

16-A, மகால் 4ஆவது தெரு, மதுரை-625 001.
தொலைபேசி: 34405, 38487



மினி ஆஃப் செட் அச்சு இயந்திரத் திறப்பு விழாவில் திரு.சி. செல்லப்பன் வரவேற்றுப் பேசுகிறார். அருகே. திரு.எஸ். ரத்தினவேல். திரு. லேனா குருசாமி உள்ளனர்.

மினி ஆஃப் செட் திறப்பு விழா

மதுரை மீனாட்சி அச்சகத்தில் மினி ஆஃப் செட் அச்சு இயந்திரத்தின் திறப்பு விழா 23-5-96 காலை சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாடு தொழில் வணிகச் சங்கத் தலைவர் திரு.எஸ். இரத்தினவேல் தலைமையில் திரு. ஜட்டலால் டி. சோலன்கி இயந்திரத்தை இயக்கி வைத்தார்.

மதுரை வங்கி மேலாளர் திரு. ஏ.ஆர். செல்லப்பன் திரு. லேனா குருசாமி திரு. எல்.பி. பூபதி மதுரை நகர் அரிமா சங்கத் தலைவர் திரு. பிஎல். செல்லப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முன்னதாக மதுரை மீனாட்சி புத்தக நிலைய உரிமையாளர் திரு.சி. செல்லப்பன் வரவேற்புரை நிகழ்த்தினார். அச்சக உரிமையாளர் திரு. செ. திருநாவுக்கரசு நன்றி கூறினார்.

திரு.வி.என். சிடி. மற்றும் பல பிரமுகர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர்.

ஐந்தாவது ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
22-1-1917

மறைவு
11-6-1991

கொப்பனாபட்டி

மு.ப.மு.பழ. மீனாட்சி ஆச்சி

எங்களை விட்டுப் பிரிந்த எங்களின்
அன்புத் தெய்வம்

மு.ப.மு.பழ. மீனாட்சி ஆச்சி

அவர்களுக்கு எங்கள் அஞ்சலி

உரிமையாளர்கள், அலுவலர்கள்,
தொழிலாளர்கள்

மீனாட்சி அன்கோ., திண்டுக்கல், சென்னை

விஜயலெட்சுமி இண்டஸ்ட்ரீஸ், திண்டுக்கல், சென்னை

மு.பழ. பழநியப்ப செட்டியார் பார்ம், பட்டுக்கோட்டை

பர்ஸ் எஸ்டேட், ஏற்காடு

சுப்பு பைனான்ஸ் கார்ப்பரேஷன், மதுரை.

திருமணம்

பிரபல தொழிலதிபரும் நற்சாந்து பட்டியைச் சேர்ந்தவருமான திரு.நா. சிவனடியான் செட்டியாரின் புதல்வி நவநீதத்திற்கும் கொப்பனாபட்டி திரு.மு.ப.மு.நா. முத்துக்கருப்பன் செட்டியார் புதல்வன் முத்துக்கருப்பனுக்கும் 21-4-95 அன்று நற்சாந்துபட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

◆◆◆

தேவகோட்டை திரு. வ. ராம. கு.மு.மு.குழ ஏகப்ப செட்டியாரின் புதல்வி முத்தாளுக்கும் தேவகோட்டை திரு.பழ.நாக.சுப. ஞானசுந்தரம் செட்டியாரின் புதல்வன் சுப்பிரமணியன் என்கிற ரமேஷ் B. Pharm க்கும் தேவகோட்டை மேனா திருமண மண்டபத்தில் 21-4-96 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

◆◆◆

தேவகோட்டையைச் சேர்ந்தவரும் பேராசிரியருமாகிய முனைவர் திரு. சபா. அருணாசலத்தின் புதல்வன் சுப்பிரமணியன் என்ற சிவமணி B. Pharm C.G.T க்கும் தேவகோட்டை திரு. அள.வீர.பெ.வெ.பெ. வெங்கடாசலம் என்ற அண்ணாமலை செட்டியார் புதல்வி அலமேலுவள்ளி B.Com. க்கும் தேவகோட்டை இராம. ஏகம்மை திருமண மண்டபத்தில் 22-5-96 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்தை ஒட்டி வாழ்த்தரங்கம் நடைபெற்றது.

தேவகோட்டையில் தேரோட்டம்

தேவகோடடையில் சித்திரைத் திருவிழாவை ஒட்டி 2-5-96 அன்று தேரோட்டம் நடைபெற்றது. அதனை முன்னிட்டு அறுவர் குழு சார்பாக தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்பெற்று நீர். மோர். பானகம் வழங்கப்பெற்றது.

கல்விக்கு நிதி உதவி: அறிவிப்பு

பொறியியல். மருத்துவம். பி.டெக்., எம்.காம்., எம்.எஸ்ஸி., பி.காம்., பி.எஸ்ஸி., பி.ஏ., பாலிடெக்னிக் படிப்பு மாணவர்களுக்கு கல்விக்கு திருப்பித் தரும் உதவியாகவும். பொறியியல். மருத்துவம். பி.டெக். படிப்பு மாணவிகளுக்கு கல்விக்கு திருப்பித்தரும் உதவியாகவும். மற்ற பட்டப்படிப்பு மாணவிகளுக்கு கல்விக்கு இலவச உதவியாகவும் 1996-ம் ஆண்டிற்கு கல்வி நிதி உதவி வழங்கப்பட இருக்கிறது. கல்வி உதவி விண்ணப்பப் படிவம் வேண்டுவோர் செயலாளர் நகரத்தார் ஐக்கிய சங்கம். 88. பவளக்காரத் தெரு. சென்னை - 600 001 என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப் பெற்றுள்ளது.

'குன்றின் குரல்' வெளியீட்டு விழா

உதகை நகரத்தார் சங்கத்தின் மூன்றாம் ஆண்டு இதழான 'குன்றின் குரல் 1995' வெளியீட்டு விழா 19-4-96 அன்று கூடலூரில் திரு. டி.என்.டி இராமநாதன் செட்டியார் இல்லத்தில் நடைபெற்றது.

திரு. மு. வள்ளியப்ப செட்டியார் தலைமை ஏற்க திரு. நா. மாணிக்கவாசகம் செட்டியார் வரவேற்புரை நிகழ்த்தினார். மலரைத் திரு. தேனப்ப செட்டியார் மற்றும திரு. காசிச் செட்டியார் வெளியிட முதல்பிரதியை திரு. மெ. அண்ணாமலை செடடியார் பெற்றுக் கொண்டார்.

அது சமயம் 'மலரும்-மணமும்' என்ற தலைப்பில் திரு. மேனா மெய்யப்பனும். 'நகரத்தார் பெண்கள்' என்ற தலைப்பில் திருமதி இந்திராவும் உரையாற்றினார். திரு. டி.என்.டி. இராமநாதன் நன்றி கூறினார்.

ஜூலை' 96 இதழ்

"நகரத்தார் குரல்" ஜூலை' 96 இதழ்

காரைக்குடி

உ. ராம. உடையப்ப செட்டியார் அவர்களின்

சிறப்பிதழாகவும்

ஆகஸ்ட்' 96 இதழ்

'காசிஸ்ரீ' 'பொற்கிழிக் கவிஞர்'

அரு. சோமசுந்தரன் அவர்களின்

சிறப்பிதழாகவும்

வெளிவர இருக்கின்றன

நிர்வாகிகள் தேர்வு

திருச்சிராப்பள்ளி மாவட்ட அடகு பிடிப்போர் மற்றும் கடன் வழங்குவோர் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் 17-3-96 அன்று திருச்சி தமிழ்ச்சங்க மன்றத்தில் நடைபெற்றது.

அப்போது திரு. ஏ.வி.கே. ஆவிச்சி செட்டியார் மீண்டும் மூன்றாவது ஆண்டாகத் தலைவராகத் தேர்வு செய்யப்பெற்றார்கள். மற்ற நிர்வாகக் குழுவினரும் தேர்வு செய்யப்பெற்றனர்.

திரு. ஏ.வி.கே. ஆவிச்சி செட்டியார் 1942 முதல் அதன் செயலாளராகப் பணியாற்றி 1990ல் தலைவராகத்தேர்வு செய்யப் பெற்றார்கள்.

மேற்படி கழகத்திற்குச் சொந்தமாக திருச்சி தில்லை நகரில் உள்ள இடத்தில் பெரும் பொருட்செலவில் திருமண மண்டபம் ஒன்று கட்டப்பெற்று வருகிறது.

திருமணம்

திருமணத்திற்கு ஜாதகம். ஃபோட்டோ மற்ற விவரங்களுடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

கவிஞர் தமிழ்தாசன்
செட்டிநாடு திருமணச் சேவை
87, சி.மெ.வீதி.
சத்தியன் தியேட்டர் அருகில்
காரைக்குடி – 630 001. போன்: 04565-33754 & 33297

பின்குறிப்பு: கட்டணம் புரோக்கரேஜ் எதுவும் வாங்கப்பட மாட்டாது.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணாபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009-ல் அச்சிட்டு நடராஜ் அண்ணாமலை அவர்களால் 108-109. நேதாஜி ரோடு. மதுரை-625 001-லிருந்து வெளியிடப் பெறுகிறது.

ஆசிரியர்: வி.என். சிதம்பரம்